Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



# நல்லாயரே நாமவிழா நல்வாழ்த்துக்கள்

ஜூன் 29

To

BOOK POST

If Undeliveried please return to ...

Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press
Diocese of Marthandam
Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam
## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



**புனித தேவசகாயமே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...**

மலர் 19 ஜூன் 2022 இதழ் 6

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.06.2022 | wednesday | 10.00 am | Thanksgiving Holy Mass | Erachakulam |
| 02.06.2022 | Thursday | 10.00 am | Marriage | Mariagiri |
| 02-04.06.2022 | | 5.00 pm | Convention | Mar Ephraem Valagam |
| 03.06.2022 | Friday | 10.00 am | Marriage | Manjathopu |
| 03.06.2022 | Friday | 3.00 pm | Marriage | Pallukuzhi |
| 04.06.2022 | Saturday | 2.00 pm<br>2.30 pm<br>4.00 pm | MCA - Seminar<br>Vincent de Paul Meeting<br>Baptism | Mar Ephraem Valagam<br>Mar Ephraem valagam<br>Mariagiri |
| 05.06.2022 | Sunday | | Thanksgiving Mass | Kattadimalai |
| 09.06.2022 | Thursday | 9.30 am | Marriage | Kallikulam |
| 10.06.2022 | Friday | | Holy mass | Valiyavilai |
| 11.06.2022 | Saturday | | Vespers | Thiruthuvapuram |
| 12.06.2022 | Sunday | <br>5.00 pm | MCYM Leadeship Programme<br>Holymass | Trivandrum<br>Anakkarai |
| 14.06.2022 | Tuesday | 3.00 pm | UCC meeting | Nagercoil |
| 18.06.2022 | Saturday | | College Day<br>Holy mass | Mariagiri<br>Keezhmancode |
| 19.06.2022 | Sunday | 8.00 am<br>4.00 pm<br>6.00 pm | Holy mass<br>Homily - Legion of Mary<br>Holy mass | Charoor<br>Thiruthuvapuram<br>Muthalar |
| 23.06.2022 | Thursday | | Marriage | Boothapandi |
| 27.06.2022 | Monday | 10.00 am | Marriage | Pattom cathedral |
| 28.06.2022 | Tuesday | 9.00 am | Jubilee - St. Thomas Apostolic Seminary | Vadavathoor |
| 29.06.2022 | Wednesday | | Bishop's feast Holy Mass | Cathedral |
| 30.06.2022 | Thursday | | His Excellancy Thomas Mar Anthonios Enthronment | Delhi |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 19 ஜூன் 2022 இதழ். 6

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM


*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Very Rev. Fr. Jose Bright*

*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni*

*PRINTING*

*Santhom Press,*

*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*

*Diocese of Marthandam*




## "சமத்துவ நல்லறம் காட்டும் நம் இல்லறப் புனிதர்"
## மறைசாட்சி தேவசகாயம் புனிதர் பட்டம் தேசிய அளவிலான நன்றி அறிவிப்பு கொண்டாட்டம்
## ஜூன் 05, தூய ஆவியார் பெருவிழா

'நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்" (1தெச 4:3) என்று கூறி தூய்மை நிலைக்கு அனைவரையும் அழைக்கும் 'ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்து உங்களுக்கு அருளும் அமையும் உரித்தாகுக'' (எபே 1:2)

இவ்வாண்டின் மே திங்கள் 15-ம் நாள் இந்தியத் திருஅவைக்கு, அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டுத் திரு அவைக்குத் தனிச் சிறப்புமிக்க் நாள். தமிழகத் திரு அவையின் தவப்புதல்வன் மறைசாட்சி தேவசகாயம் அவர்களின் புனிதர் பட்ட நிகழ்வு அன்று நடக்கவிருக்கின்றது. தமிழக மக்கள் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரந்திருக்கும் தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்திற்கும் இது ஒரு அக்களிப்பின் நாள்.

மறைசாட்சி தேவசகாயம் இந்திய மண்ணிலே தம் இரத்தத்தைச் சிந்தி மறைசாட்சி மகுடம் பூண்ட முதல் இந்தியர் அவர். இந்தியத் திரு அவையின் முதல் பொதுநிலைப் புனிதர்; முதல் இல்லறப் புனிதர். தமிழகத் திரு அவையின் முதல் புனிதர். இப்படி பற்பல முதன்மைகளைக் கொண்ட நம் புனிதர் தேவசகாயம் என்பதனை உணர்ந்து தூய்மை நிலையின் ஊற்றாம் கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

### நம்பிக்கை நிறைந்த நல்வாழ்வு

நம் புனிதர் தேவசகாயம் தமிழ்நாட்டின், குமரிமாவட்டத்தின் நட்டாலம் என்னும் அழகுறு கிராமத்தில் 1712-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ம் நாள்பிறந்தார். தம் முதல் குழந்தை இவருக்கு பெற்றோர்கள் இட்ட பெயர் 'நீலம்' என்பதாகும். இப்பெயர் 'நீலகண்டன்' என்றும் சொல்லப்பட்டது.

### கல்வி, பயிற்சி

கடவுள் நம்பிக்கை நிறைந்த குடும்பம் அது, தேவையான சொத்து சுகங்களை கொண்டு வாழ்ந்திருந்தவர்கள். எனவே சிறுவன் நீலகண்டனுக்கு நற்கல்வி கிடைத்தது. தமிழ், மலையாளம் மற்றும் சமஸ்கிருதம் மொழிகளைக் கற்றார். இளமையிலேயே நல்ல போர்ப் பயிற்சியையும், குறிப்பாக, தற்காப்புக் கலைகளாகிய சிலம்பம், அடிமுறை மற்றும் வர்மக் கலையினையும் ஆசான்களிடமிருந்து கற்றுக் கொண்டார்.

### ஏற்ற பணிகள்

நீலகண்டன் முதலில் சிறிதுகாலம் படை வீரனாகச் சேர்ந்தார். அப்பணியில் சிறந்து விளங்கினார். இளைஞனாக இருந்தபோதே அரசனின் அரசவையிலும் பணியமர்த்தப்பட்டார்.

### திருமணம்

நீலகண்டனின் 27-ம் வயதில் மேக்கோடு என்னும் ஊரைச் சேர்ந்த பரமேஸ்வரன், அனந்தேஸ்வரி ஆகியோரின் மகள் பார்கவி என்பவரைப் பெற்றோர், பெரியோர்களின் ஏற்பாட்டின்படி முறைப்படி திருமணம் முடித்து இல்லறம் மேற்கொண்டார். இல்லற வாழ்வில் மகிழ்வுடன் ஈடுபட்டிருந்தார். தம் நிலத்தையும், ஆடுமாடுகளையும் பார்த்துவந்த அந்தக் காலத்தில் மிகுந்த தாழ்ந்தவர்களாகவும் ஏறக்குறைய அடிமைகளாகவும் நடத்தப்பட்ட மக்களிடம் அவர் நெருங்கிப் பழகினார்.

### குளச்சல் போர், டிலனாய் வருகை

இக்கால கட்டத்தில் தான், 1741-ஆம் ஆண்டு துறைமுக நகராம் குளச்சலில் மார்த்தாண்டவர்மாவின் திருவிதாங்கூர் படைகளுக்கும் ஆக்கிரமிக்க வந்த டச்சுப் படைகளுக்கும் இடையே போர் ஏற்பட்டது. அப்போரில் டச்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அச்சூழலில் டச்சுப் படையிலிருந்து 24 பேர் மார்த்தாண்ட வர்மாவிடம் சரணடைந்து போர்க்கைதிகள் ஆயினர். திருவிதாங்கூர் படையில் சேர்ந்து மன்னனுக்கு விசுவாசமாக இருந்து பணியாற்ற வாக்குறுதி அளித்ததால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுள் ஒருவர் பெனதிக்து டிலனாய் என்னும் கத்தோலிக்கர். திருவிதாங்கூர் படையை நவீனப்படுத்தவும், மண்கோட்டைகளைக் கற்கோட்டைகளாக்கவும் டிலனாய்க்குப் பொறுப்பு தரப்பட்டது. அவ்வாறு அரண்மனையைச் சுற்றி உதயகிரிகோட்டை கட்டும் அலுவல் நடந்தது. அந்தப் பணிகளின்போது, தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பொறுப்பு கருவூல அலுவலரான நீலகண்டரிடம் இருந்தது.

### துன்பம் என்னும் சோதனை

நீலகண்டன் - பார்கவி அம்மாள் குடும்பம் சில நட்டங்களை அனுபவிக்க நேர்ந்தது. எவ்வாறெனில், வானம் பொய்த்துப்போக, பயிர்கள் கரிந்து போயின. நல்ல மாடுகள் சில நோயுற்று மடிந்து போயின. இதனால் கவலை கொண்டனர். தம்பதியர், மக்கள் செல்வமும் இன்னும் பிறக்காத நிலையில் வேளாண் தொழில் இழப்பும், கன்றுகாலிகளின் இறப்பும், இக்குடும்பத்தை வருத்தத் தொடங்கியது. இதனால் நீலகண்டன் மிகவும் கவலையோடு காணப்பட்டார். அவரோடு உரையாடி ஆற்றுப்படுத்தி, விவிலிய மாந்தர் யோபுவின் வரலாற்றை எடுத்துக் கூறினார் டிலனாய். டிலனாயின் நற்செய்தி விளக்கத்தினால் தெளிவு பெற்றார் நீலகண்டன். நீலகண்டனின் உறுதியை அறிந்து கொண்ட டிலனாய், அவரை வடக்கன்குளத்தில் இருந்த நேமம் மிஷன் தலைவர் சேசுசபை அருள்பணி யொவான்னி பத்திஸ்தா புத்தாரியிடம் அனுப்பினார்.



தந்தை புத்தாரி 9 மாதங்களாக நிலகண்டனுக்கு மறைக்கல்வி கற்றுத் தந்தார். மே 14, 1745-ல் திருமுழுக்குப் பெற்று தேவசகாயம் ('லாசர்" என்னும் பெயரின் தமிழாக்கம்) என்று மாறினார். அவருடைய ஞானத்தந்தை ஞானப்பிரகாசம் என்பவர். தொடர்ந்து ஒப்புரவு பெற்று முதல் திருவிருந்தும் அருந்தினார்.

### புதுக்கிறித்தவர் தேவசகாயத்தின் வாழ்க்கை

திருமுழுக்கு தேவசகாயத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. தன் இதயத்திலும் வாழ்விலும் பெரும் மகிழ்ச்சியை அனுபவித்தார் தேவசகாயம். தான் பணியாற்றிய மன்னனின் அரண்மனையில் தம்மை எல்லாரும் 'தேவசகாயம்" என்று அழைக்கச் சொன்னார். கிறிஸ்தவ வழிபாடுகளிலும் அருளடையாளங்களிலும் பெரும் ஈடுபாட்டுடன் பங்கேற்றார். ஒரே கடவுளின் பிள்ளைகள் தாம் எல்லாரும் என்று உணர்ந்தார். எல்லா மக்களிடமும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடமும் நல்லுறவு பாராட்டினார். சாதி அடையாளங்களையும், மரபுகளையும், சாதிச் சட்டங்களையும் மீறினார்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று தான் சந்தித்த அனைவரிடமும் தமது புதிய நம்பிக்கையை எடுத்துரைத்தார் தேவசகாயம். அவரது சாட்சியத்தால் அவரது மனைவி பார்கவி அம்மாள் திருமுழுக்கு பெற்று 'ஞானப்பூ" என்னும் பெயர் பெற்றார். 'தெரசா' என்னும் பெயரின் பெயரின் தமிழாக்கம்). அவ்வண்ணமே படைவீரர் சிலரும் மனம் மாறினர்.

### குற்றச்சாட்டும் கைதும்

இவை அனைத்தும் தவறாகத் திரித்துக் கூறப்பட்டு மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. புதிய நம்பிக்கையை மேற்கொண்டு, புதிய வழிபாடுகளை அவர் பின்பற்றியது 'தெய்வ துரோகம்'' என்று சொல்லப்பட்டது. சமுதாய சமத்துவத்தை அவர் கைக்கொண்டு வாழ்ந்ததும், சாதி மறுப்புச் செய்ததும் 'குலத் துரோகம்" என்று தீர்பிடப்பட்டது.

புதிய நம்பிக்கையை எல்லாம் விட்டுவிட மன்னவன் கூற, அதை ஏற்காமல் தம் கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக் இருந்ததை 'ராஜதுரோகம்'' என்றார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடன் அவர் உறவுக்கொண்டு வாழ்ந்ததைத் தீட்டு என்று சொல்லி அத்தீட்டுப்பட்ட நிலையில் அவர் அரண்மனைக்குள் வரக்கூடாது என்றார்கள். பல்வேறு தவறான குற்றச்சாட்டுகளுக்காக 28-02-1749-ல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

### வன்கொடுமைகளும் மறைசாட்சியமும்

கைது செய்யப்பட்ட தேவசகாயம் அனைத்துப் பொறுப்புக்களிலுமிருந்து நீக்கப்பட்டார். அவரது சொத்துக்களின் உரிமையும் அவருக்கு மறுக்கப்பட்டது.

ஆளுநர்முன் நடந்த விசாரணையின்போது, தமது புதிய நம்பிக்கையை மறுக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களோடு பழங்குவதைத் தவிர்க்கவும் மறுத்தார். உடனே அவரைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். அதோடு திருவிதாங்கூர் அரசில் உள்ள உள்நாட்டு லத்தீன்சபைக் கிறிஸ்தவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

இரண்டுமுறை சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டாலும் மூன்றாம்முறைதான் அவர் கொல்லப்பட்டார். அதற்கிடையில்

- திருவிதாங்கூர் அரசின் எட்டு தாலூக்காக்களுக்கும் இழுத்துச் செல்லப்பட்டு விசாரணையும் பல்வேறுவிதமான வன் கொடுமைகளுக்கும் உள்ளானார்.
- கைகள் கட்டப்பட்ட நிலையில், எருக்கம் மாலை அணியப்பட்டு, எருமைமீது அமர்த்தப்பட்டு பல ஊர்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டார்.
- முள்சாட்டையாலும், தடிகளாலும் அடிக்கப்பட்டார்.
- காயங்களில் மிளகு வத்தல் பொடி அல்லது சாந்து தேய்க்கப்பட்டது.
- ஏழு மாதங்கள் திறந்த வெளியில் மரத்தில் கட்டப்பட்டுக் கிடந்தார்.
- கைது செய்யப்பட்டது முதல் இறப்பு வரை நீராடவோ, குளிக்கவோ, முடி வெட்டிக்கொள்ளவோ, சவரம் செய்து கொள்ளவோ அனுமதிக்கப்படவில்லை.
- பசிக்கும் தாகத்துக்கும் உட்படுத்தப்பட்டார்.
- மக்களின் கண்களில் படாதவாறு வெவ்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டு, இறுதியில் ஆரல்வாய்மொழி சிறையில் அடைக்கப்பட்டார்.
- அத்தனை துன்பங்களிடையேயும் தேவசகாயம் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். எந்த கோபமோ, எரிச்சலோ, சோகமோ அவரை ஆட்கொள்ளவில்லை.
- தம் பாடுகளில் தம் மனைவியையும் மறக்காமல் மூன்று நான்குமுறை வரச் சொல்லி சந்தித்தார்.
- ஏறக்குறைய மூன்றாண்டளவாக நீராட அனுமதிக்கப்படாமல் இருப்பினும் அவரது உடலிலிருந்து எந்த நாற்றமோ, நெடியோ வீசவில்லை.

  இறுதியாக, ஆரல்வாய்மொழி காற்றாடிமலைக்குக் கொண்டு செல்லப்பட்டு 1752-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ஆம் தேதி நள்ளிரவில் 5 குண்டுகளுக்கு இரையாகி மறைசாட்சியாய் தன்னுயிரைத் தந்தார்.



அவரது உடல் காட்டு விலங்குகளுக்கு இரையாகப் போடப்பட்டது. ஐந்து நாட்களுக்குப் பின் அவ்வுடலின் எஞ்சிய பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அப்பொழுதே புகழ் பெற்றிருந்த கோட்டாறு புனித சவேரியார் ஆலயத்தில் (இன்று கோட்டாறு மறைமாவட்டப் பேராலயம்) நடுப் பீடத்திற்குமுன் மறைசாட்சியின் உடலின் எஞ்சிய பகுதிகள் அடக்கம் செய்யப்பட்டன.

### அன்றுமுதல் இன்றுவரை

மறைசாட்சியின் சாவு தொடக்க முதலே ஒரு மறைசாட்சியமாகவே மக்களால் பார்க்கப்பட்டு வந்துள்ளது. எனினும் திரு அவையின் அதிகாரப்பூர்வமான அறிவிப்புக்கான விண்ணப்பம் 2003-ம் ஆண்டில்தான் முறையாக தமிழகத் திருஅவையின் பரிந்துரையோடு அனுப்பப்பட்டது.

2012-ஆம் ஆண்டு மறைசாட்சி தேவசகாயம் மறைசாட்சியாக அறிவிக்கப்பட்டு அருளாளர் நிலை அடைந்தார். தொடர்ந்து நடந்த ஆய்வுகளில் நமது மறைசாட்சி தேவசகாயத்தின் பரிந்துரையால் அற்புத நிகழ்வு ஒன்று திருத்தந்தையால் 2020-ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, வருகிற மே மாதம் 15-ஆம் நாள், பாஸ்காவின் 5-ஆம் ஞாயிற்றுக்கிழமையன்று வத்திக்கானில் திருத்தந்தையால் புனிதராக அறிவிக்கப்படும் இனிதான நிகழ்வு நடைபெற இருக்கின்றது.

### புதுப்புனிதர் நமக்குத் தரும் செய்தி

தமிழகத் திரு அவையின் தவப்புதல்வன் மறைசாட்சி தேவசகாயத்தின் புனிதர் நிலை அறிவிப்பு நம்மையே நாம் புதுப்பித்துக்கொள்ள நமக்கென்று பிறந்திருக்கும் ஒரு வாய்ப்பு. முதலாவது, நமது கத்தோலிக்கக் கிறிஸ்தவ நம்பிக்கையில் நாம் ஆழமும் உறுதியும் கொள்வோம்.இன்றை சமூக, அரசியல் சூழலில் நமது நம்பிக்கை வாழ்வுக்கு எத்தனை எத்தனையோ சவால்கள் ஏற்பட்டுள்ளன. அவை அனைத்தையும் உறுதியுடன் ஏற்றுக்கொண்டு நம்பிக்கையினால் நாமும் நற்சான்றுகளாக மாற இயலும் (காண். எபிரே. 11:39).

இரண்டாவது, தமிழகத் திரு அவையில் இன்றும் நிலவும் தீமை சாதியின் அடிப்படையில் மக்கள் பிரிந்திருப்பதும், அந்தச் சாதி உணர்வுகளால் நடக்கும் குழப்பங்கள், ஏற்றத்தாழ்வுகள், கலவரங்கள் முதலிய தீமைகள். இச்சூழலில் ‘சமத்துவ நல்லறம் காட்டும் நம் இல்லறப் புனிதர்” தேவசகாயம் தரும் ‘சாதிகள் இல்லா சமத்துவம்” என்னும் செய்தி நம்மைத் தூண்டி எழுப்புகிறது. (கலா3:27-28) என்ற இறைவார்த்தையின் இந்த அறைகூவல், புனித தேவசகாயம் தரும் இரண்டாவது முக்கியச் செய்தியாகும்.

மூன்றாவது, இணைந்து பயணிக்கும் திருஅவை என்னும் ஆயர் மாமன்றச் செய்தியும், இந்தப் பொதுநிலை, இல்லறப் புனிதர் நமக்கு விடுக்கும் ஓர் அழைப்பாகவே தெரிகிறது. யாரையும் விளிம்பு நிலையினர் என்று தள்ளிவிடாமலும், வாழ்வுநிலைகளில் படிமுறை ஏற்றத் தாழ்வுகளையும், வகுப்புவாத மனநிலையையும் போக்கி 'இணைந்து பயணிக்க' இந்த இல்லறப் புனிதர் நம்மை அழைக்கிறார்.

**தேசிய நன்றி விழா**

நம் இல்லறப் புனிதர் மறைசாட்சி தேவசகாயத்தின் புனிதர் நிலை அறிவிப்பினை இந்தியத் திருஅவை வருகின்ற ஜூன்5ஆம் நாள், தூய ஆவியின் திருநாள் அன்று கொண்டாடுகின்றது. நம் புனிதர் மறைசாட்சி மகுடம் பூண்ட காற்றாடிமலைப் பகுதியில் இது நடத்தப்படுவது தனிச் சிறப்பாகும்.

திருத்தந்தையின் இந்தியத் தூதுவர் மேதகு லெயோபோல்டோ ஜிரெல்லி தலைமையேற்க, இந்தியத் திருஅவையின் பல்வேறு தலைவர்களான கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருள் பணியாளர்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் திரளாகக் கலந்துக்கொள்ள இருக்கிறார்கள்.

பிற்பகல் 2.30 மணிக்கு கலை நிகழ்வுகளுடன் தொடங்கும் இக்கொண்டாட்டம் 5 மணிக்கு நடைபெறும் மாபெரும் ஆடம்பரத் திருப்பலியுடன் நிறைவு பெறும்.

கோட்டாறு மற்றும் குழித்துறை மறைமாவட்டங்கள் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்கின்றன. அவர்களுக்கு நம் இறைவேண்டலாலும், பொருள் உதவியாலும் நமது ஒத்துழைப்பை வழங்கலாம். ஆனால் மிக முக்கியமாக தமிழகமெங்குமிருந்தும் மக்கள் இந்திய நாடெங்குமிருந்து அங்குக் கூடிவரும் அனைவரோடும் இணைந்து, தமிழகத்தின் தவப்புதல்வன் மறைசாட்சி புனித தேவசகாயத்தை கொண்டாடுவோம். நிறை ஆசி பெறுவோம்.

*இவண்,*
தமிழக ஆயர் பேரவை
தலைவர்
**+ மேதகு பேராயர் ஜார்ஜ் அந்தோனிசாமி**
சென்னை- மயிலை பேராயர்

*செயலர்*
**+ மேதகு தாமஸ் பால்சாமி**
திண்டுக்கல் மறைமாவட்ட ஆயர்

*துணைத்தலைவர்*
**+ மேதகு இலாரன்ஸ் பயஸ்**
தருமபுரி மறைமாவட்ட ஆயர்



*மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை*
*2022-ஆம் ஆண்டு பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு*
*ஆயர் மாமன்றபணிக்குழு தலைவர்*
**மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்கினாத்தியோஸ்**
*வழங்கும் மேய்ப்பு மடல்*

## பொதுநிலையினர் தினம்

மதிப்பிற்குரிய ஆயர்களே, கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, குருக்களே, துறவிகளே, இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதிரிகளே,

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை மே மாதம் 1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பொதுநிலையினர் தினத்தை கொண்டாடுகிறது. பொதுநிலையினரின் அழைப்பும் பணியும் குறித்து ஆய்வு செய்யும் இந்நாளில் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுநிலையினர்கள் என்பவர்கள் யார்? திருமுழுக்கால் திருஅவையாகும் மறைஉடலுடன் ஒன்றுப்படுத்தப்பட்டவர்கள். கிறிஸ்துவின் உறுப்புகள், திருஅவையின் உறுப்புகள் இவற்றுடன் பிரிக்க முடியாத வகையில் இணைக்கப்பட்டவர்கள், தூய ஆவியின் ஆலயங்கள். இயேசுவின் முப்பெரும் பணிகளில் பங்கேற்பவர்கள், தூயவர்களாக இருக்க அழைக்கப்பட்டவர்கள். பொதுநிலையினர் என்னும் சொல் உலகத்துடன் தொடர்புடையவர்கள் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொதுநிலையினரை குறிப்பிட ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் Lay, Laity போன்ற வார்த்தைகள் Laikos என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. 'லாவோஸ்' (Laos) என்னும் கிரேக்க சொல்லுக்கு மக்களுடன் தொடர்புடையது அல்லது மக்கள் என்று பொருள். புதிய ஏற்பாடு திருஅவையை "தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்" என்றும், "அரச திருக்கூட்டம்" என்றும், "தூயவர்கள்" மற்றும் "கடவுளின் சொந்த மக்கள்" எனவும் அழைக்கிறது.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் திருஅவையை குறித்து ஆய்வு செய்யும் போது "இறைமக்கள்" "தோழமை" ஆகிய இரண்டு கருத்துக்களை வலியுறுத்துகிறது. இறைமக்கள் அனைவரும் இறைதிட்டத்திற்கேற்ப தங்களின் கடமைகளை நிறைவேற்றஅழைக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுநிலையினர், குருக்கள், ஆயர்கள் என்றவேறுபாடு இல்லாமல் திருமுழுக்கு வழியாக இறைசமூகத்தில் இணைக்கப்பட்ட ஒவ்வொரு நபர்களும் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள் என்ற நிலையில் மதிப்பும் பணிக்கடமையும் உடையவர்கள். இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் இறைமக்களின் மூன்று வகையான பணிகளை குறித்து வருணிக்கின்றது.

குருத்துவ பணி, இறைவாக்கு பணி, வழிநடத்தும் பணி. நம்பிக்கையாளர்கள் அனைவரும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கேற்பதால் அவர்களின் குருத்துவத்தை பொது குருத்துவம் என்று அழைக்கின்றோம். பொது குருத்துவமின்றி பணிகுருத்துவம் இல்லை. உலகின் மத்தியிலும், திருஅவையின் இதயத்திலும் வாழ அழைக்கப்பட்டவர்களே பொதுநிலையினர். 1987-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 முதல் 30 வரை நடந்த ஆயர் மாமன்றத்தின் பலனாக "பொதுநிலை நம்பிக்கையாளர்கள்" என்றதிருத்தூதுவ அறிவுரையை திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் வழங்கினார். திருஅவை மக்களின் பங்கேற்பு உலகில் திருஅவையின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும். இது வழியாக கிறிஸ்துவின் அரசு வளர்ச்சியடையும். இந்நோக்கத்தையே திருஅவை மனதில் கொண்டுள்ளது. தோழமை உணர்வில் திருஅவையை உற்று நோக்கினால் பொதுநிலையினருக்கு திருஅவையிலுள்ள பங்கேற்பின் தேவையை புரிந்துகொள்ள முடியும். புனித கிரிகோரியார் இவ்வாறு கூறுகிறார்: "திருஅவையில் அனைவரையும் ஒவ்வொருவரும் போற்றி வளர்த்துகின்றனர், அனைவரும் பேணி காக்கப்படுகின்றனர்."

பொதுநிலையினர்கள் அனைவரும் தங்கள் செயல் மண்டலங்களில் தங்கள் கடமைகளை நிறைவேற்றவேண்டும். குடும்பம், கல்விதுறை, இயக்கங்கள், அரசியல்துறைபோன்றவை இவர்களின் செயல் தளங்களாக உள்ளன. குடும்பம் தனிநபர்களை ஒருங்கிணைக்கின்றது. அனைத்துலக திருஅவையின் ஆற்றலும் அழகும் இல்லத்திருவையே. குருக்களும், துறவிகளும், ஆயர்களும், திருத்தந்தையும் குடும்பங்களிலிருந்தே உதயமாகுகின்றனர். குடும்பங்கள் வீழ்ந்து போனால் திருஅவையின் அடித்தளம் அசைவுறுகிறது. குடும்பத்தில் இறையாட்சி நிறைந்தால், ஜெப வாழ்வு தொடர்ந்தால் திருஅவை தளிர்த்து வளரும்.

பொதுநிலையினர் தங்கள் கடமைகளை தனித்தும் இணைந்தும் செயல்படுத்த முடியும். கிறிஸ்தவ வாழ்விலிருந்து முளைத்து வளரும் பொதுநிலையினரின் தூதுரைப்பணிக்கு மாற்றாக எதுவும் இல்லை. திருஅவை சுதந்திரமாக செயல்பட இயலாத சூழல்களில் பொதுநிலையினரின் மறைத்தூதுப்பணிக்கு முக்கியத்துவம் உண்டு. பொதுநிலையினர் தாங்கள் செயல்படும் செயல்தளங்களில் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக விளங்க இயல வேண்டும். உலகின் மத்தியில் வாழ்ந்து, கிறிஸ்துவின் ஒளியால் உலகை ஒளிர்விக்க இவர்கள் கடமைப்பட்டுள்ளுனர். சமூக அரசியல் துறையில் உண்மைக்காகவும் நீதிக்காகவும் நிலைப்பாடு எடுத்து சீர்திருத்தும் ஆற்றலாய் செயல்பட பொதுநிலையினரை ஆயத்தம் செய்ய வேண்டும் என்பது திருஅவை சந்திக்கும் பொது சவால்.



பொதுநிலையினரின் மற்றொரு செயல்தளம் பங்கு ஆகும். திருஅவையின் உலகளாவிய தன்மையின் அனுபவம் பங்கு சமூகத்தில் தான் வெளிப்படுகிறது. உலகளாவிய திருஅவை தலத்திருஅவையில் வெளிப்படுகிறது. திருஅவை தனது மக்களின் இல்லங்களில் கடந்து வரும் போது அந்த கூட்டு இயக்கத்தை பங்கு என்கிறோம். பங்கு என்பது ஒரு இயக்கமோ கட்டிடமோ அல்ல, மாறாக கடவுளின் குடும்பம். ஒன்றுப்படுத்தும் தோழமை சமூகம். பங்கு ஒரு நற்கருணை சமூகம். இறைசமூகத்தை கட்டி எழுப்புவது இந்த நற்கருணையே. பங்கின் உருவாக்கத்திலும் நிலை தன்மையிலும் பொதுநிலையினரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

பங்கு ஒரு நம்பிக்கை சமூகம். இச்சமூகத்தில் குருத்துவ திருநிலையில் உள்ளவர்களும், பொதுநிலையில் உள்ள நம்பிக்கையாளர்களும் உட்படுவர். பங்குத்தந்தை மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதியாக உள்ளார். பங்குத்தந்தை திருஆட்சி அமைப்புடன் இறைமக்கள் சமூகத்தை ஒன்றிணைக்கிறார். நம்பிக்கை சமூகத்தின் ஆன்மீக மையமாக பங்கு திகழ்கிறது. பங்கு அமைப்புகள் முறைப்படி செயல்படாவிட்டால் திருஅவை மக்கள் ஆன்மீகத்தை தேடி பிறபசும்புல் வெளிகளை நோக்கி ஓட நேரிடும். பொதுநிலையில் உள்ளவர்களின் செயல்பாட்டு தளமே பங்கு.

இக்காலத்தில் நீதி நிறைந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவது திருஅவையின் திருப்பணிகளில் முக்கியமான ஒன்றாக உள்ளது. எனவே அரசியல் செயல்பாடுகளை ஒரு திருப்பணியாக கருதவேண்டும். அரசியல் என்பதை கட்சி அரசியலாக எண்ண வேண்டாம். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு அரசியல் செயல்பாடுகளில் மதிப்பீடுகளை மதிக்கின்றஅரசியல் முடிவுகள் உருவாக்கி எடுப்பதற்கு பொதுநிலையினர்களுக்கு இயல வேண்டும். அரசியல் மறுப்பு மனநிலை விட்டு, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு சிந்தித்து விழுமியங்களை போற்றும் புதிய தலைமுறையை உருவாக்க பொதுநிலையினர் முயல வேண்டும். காலத்தின் அறிகுறிகளை கண்டறிந்து செயல்படும் பொதுநிலையினருக்கு மட்டுமே தலத்திருஅவையின் வளர்ச்சியில் பங்கேற்பும், பங்களிப்பும் வழங்கி திருஅவையின் குரலாகவும் ஆற்றலாகவும் விளங்க இயலும்.

"தோழமையே திருஅவை" என்ற இறையியல் சிந்தனையின் அடிப்படையில் பொதுநிலையினரின் அழைப்பையும் பணியையும் ஆய்வு செய்யும் போதும், திருஅவையின் திருப்பணிகளில் வேறுபட்ட பங்கேற்புகள் ஒருங்கிணைக்கப்படும் போதும் திருஅவை ஒரு கூட்டு இயக்கமாக

மாறுகிறது. திருஅவையில் திருப்பணி செய்பவர்கள் "ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருக்கின்றனர்" (திப 4:32). திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்திருக்கும் ஆயர் மாமன்றம் கூட்டு பொறுப்புள்ள கூட்டு இயக்க திருஅவைக்கு வழிகாட்டுகிறது. கல்வி, சுகாதாரம், சட்டம், வேளாண்மை, சமூக சேவை, பண்பாடு, அரசியல், ஆட்சி துறை, வணிகத்துறைசுருங்க கூறின் வாழ்வின் எல்லா துறைகளிலும் திருஅவை மக்கள் கடந்து சென்று திருஅவைக்கு புதுச்சாயல் வழங்க கடமைப்பட்டுள்ளனர்.

வளர்ந்து வரும் வன்முறைக்கு முன் நம்பிக்கையாளர்களின் வாழ்வும் பாதுகாப்பும் உறுதிப்படுத்த இயலவில்லை. இதை தெரிந்து கொள்ள இந்தியாவில் மாறிவரும் அரசியல் சூழல்களை ஆழத்தில் ஆய்வு செய்ய வேண்டும். எதிர்ப்புகளும் பழித்துரைகளையும் சந்திக்கலாம். திருஅவையின் சமூக சேவை துறையிலும் ஆன்மீக துறையிலும் எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அரசியல் அமைப்புச்சட்டம் ஊக்கமளிக்கும் உரிமைகள் மறுக்கப்படும் போது குரலெழுப்ப இயலாமல் தயங்கி நிற்கின்றோம். அடிப்படை உரிமைகள் கூட ரத்துச் செய்யப்படுகிறது. திருஅவைக்கு எதிரான சக்திகள், கொள்கைகள் நம்பிக்கை சமூகத்தில் ஊடுருவுகின்றன. ஆன்மீகத்தை கடந்து பொருளும் நிறுவனங்களும் முக்கியத்துவம் பெற்றதிருஅவையில் பிளவுகளும் போராட்டங்களும் தோன்றி திருஅவையையும் திருஅவை மக்களையும் பார்த்து பொது சமூகம் நகைக்க நேரிடலாம்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் உள்ளுணர்வை உள்வாங்கி அரச, குருத்துவ, இறைவாக்கு பணிகளில் முழுமனதோடு பங்கேற்கும் பொதுநிலையினர் ஏராளம் ஏராளம். இவர்கள் பங்குகளின் முதுகெலும்புகளாக செயல்படுகின்றனர். மறைக்கல்வி ஆசிரியர்கள், இயக்கங்களில் செயல்படுபவர்கள், இளையோர்கள், மறைபணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் இவர்களை எல்லா துறைகளிலும் நாம் பார்கிறோம். உண்மை திருஅவையின் உளப்பாங்கை உள்வாங்கி செயல்வீரர்களாக, கடமை உணர்வுடன் திருஅவை வாழ்வை மேற்கொள்ளும் அனைவரையும் பாராட்டுகிறேன். கூட்டுப் பொறுப்பும் பொதுநிலையினரின் பங்கேற்பும் உள்ள மலங்கரை கத்தோலிக்கத் திருஅவை பயணம் செய்ய வேண்டிய தூரம் அதிகம். பொதுநிலையினர் கடமை உணர்வுடன் திருஅவையுடன் இணைந்து பயணிப்பதற்கு இந்த பொதுநிலையினர் தினமும் உதவி புரியட்டும்.

மலங்கரை கத்தோலிக்கத் திருஅவையில் பொதுநிலையினர் தினம் ஒரு பொது கொண்டாட்டமே. மலங்கரை கத்தோலிக்க இயக்கம், மலங்கரை



கத்தோலிக்க தாய்மார் சங்கம், மலங்கரை கத்தோலிக்க தந்தைமார் சங்கம், வின்சென்டி தே பால் சங்கம், மரியாயின் சேனை போன்றஇயக்கங்கள் இதனை இணைந்து கொண்டாட வேண்டும். திருஅவையின் வளர்ச்சிக்கும், சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் பொதுநிலையினர் அமைப்புகள் வழங்கும் தலைமைக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி கூறுகிறேன். நற்செய்தி சங்கம் வாயிலாக பொதுநிலையினர் வழங்கும் சான்றுவாழ்வையும் அற்பண மனப்பான்மையும் பாராட்டுகிறேன். மறைத்தூதுப்பணி தளங்களில் இல்லங்களை மையமாகக் கொண்டு நற்செய்திபணிச் செய்யும் பொதுநிலையினரையும் அவர்களது ஆர்வத்தையும் வியந்து பாராட்டுகிறேன். புலம்பெயர்ந்து வாழும் மக்கள் தங்கள் துன்ப துயரங்களின் மத்தியிலும் நற்செய்தி அறிவிப்பதில் காட்டும் ஆர்வம் அவர்களை திருஅவையின் ஒளிரும் சான்றுகளாக திகழ வைக்கிறது. வெளிநாடுகளில் வாழும் இறைமக்கள் தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை இரக்கச் செயல்களுக்காக மாற்றி வைப்பது பாராட்டுதலுக்குரியது. துயரம் நிறைந்த இந்த காலத்தில் தூய ஆவியார் துணிவுடன் வாழ நமக்கு துணை புரியட்டும். பொதுநிலையினர் தினத்தில் சேகரிக்கப்படும் காணிக்கை திருஅவையின் பொதுநிலையினர் பணிக்குழு பணிகளுக்காக பயன்படுத்தப்படும். மனமுவந்து காணிக்கை வழங்க கேட்டுக் கொள்கிறேன். திருஅவையின் தனிச்சட்டம் எண் 601-ன் படி சேகரிக்கப்படும் காணிக்கையை பங்கு தந்தையர்கள் மறைமாவட்ட நிதிகாப்பாளர்களுக்கு அனுப்பிவைத்து, அவர் அதன் பாதி தொகையை மறைமாவட்ட பொதுநிலையினர் பணிகுழுவிற்கும், பாதி தொகையை திருஅவையின் தலைமை செயலகத்தில் உள்ள நிதிகாப்பாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும். பொதுநிலையினர் இயக்கத்தின் விண்ணக பாதுகாவலரான தூய சூசையப்பர் நமக்காக பரிந்து பேசட்டும். இறைவன் உங்கள் குடும்பங்களை ஆசீர்வதித்து தூய்மையால் நிறைக்கட்டும். உயிர்த்த ஆண்டவர் அனைத்து பொதுநிலையினரையும் ஆசீர்வதிப்பாராக.

**+ ஜோசுவா மார் இக்னாத்தியோஸ்**
பொதுநிலையினரின் ஆயர் மாமன்றத்திற்கான பணிக்குழு தலைவர்
மாவேலிக்கரை மறைமாவட்ட ஆயர்

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்,
பொதுநிலையினர் தினம் 2022

**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

06.04.2022

**“வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா...”(லூக் 24:32)**

கிறிஸ்துவிற்குள் பிரியமான அருட்தந்தையர்களே, துறவியரே, அன்பு இறைமக்களே!

உயிர்த்த ஆண்டவரின் ஆசிரும் அருளும் உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் வந்து நிறைந்து தங்குவதாக. இன்றைய மின்னிலக்க உலகத்தில் அரசியல், பொருளாதார, சமூக பண்பாடு, சூழல்கள் மாறிக்கொண்டிருந்தாலும் ஏழைகளின் கதறல், வறியவரின் கண்ணீர் இவைகளுக்கு மாற்றம் ஏதும் நிகழவில்லை. உலகெங்கும் நடக்கும் வன்முறைகள், அதிகாரப் போட்டிகள், இயற்கை சுரண்டல்கள் ஆகியவை எழுப்பும் கேள்விகளுக்கு ஒரே பதில் தான் இருக்கிறது. அந்த பதில் நம்முடைய இதயத்திலிருந்தும், திருஅவையினுடையவும், சமூகத்தினுடையவும் அடிப்படை அலகாக இருக்கும் குடும்பத்திலிருந்தே வர வேண்டும். “உலகெங்கும் சென்று நற்செய்தி அறிவியுங்கள்” என்றஅழுத்தமான செய்தியை பவுலடியார் வாழ்ந்து காட்டினார். உலகெங்கும் என்றசொல்லுக்குள் இன்றைய மின்னிலக்க உலகமும் அடங்கியிருக்கிறது.

பாதை மாறி பயணிக்கும் இளையோர்களுக்கும், அன்பும் பாசமும் இரக்கமும் கனிவும் பகிரப்படாத குடும்பங்களுக்கும், மின்னிலக்க சூழலில் வளரும் குழந்தைகளுக்கும் நிம்மதி தரும் வாழ்வு ஆன்மீக வாழ்வு. காலத்தின் அடையாளங்களை வாசித்தறிந்த மலங்கரை கத்தோலிக்கத் திருஅவை இந்த ஆண்டை ஆன்மீக ஆற்றல்படுத்துதல் ஆண்டாக கடைபடிக்கும்படி அறிவுறுத்தியுள்ளது



உங்களுக்கு தெரிந்ததே. நமது மறைமாவட்டத்தில் இந்த முயற்சியை தாபோர் தியான இல்லம் வழியாகவும் ஏழு நற்கருணை சிற்றாலயங்கள் மற்றும் திருத்தலங்கள் இவற்றைமையமாகக் கொண்டும் இந்த ஆன்மீக ஆற்றல் படுத்துதலை ஊக்குவித்து நிஜமாக்க முயல்வோம். பங்கு தளங்களில் இதற்கான தனிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது சாலச் சிறந்தது. நமது வாழ்வை ஆண்டவரோடும் அவரது திருஅவையோடும் இணைந்த அருள்வாழ்வாக மாற்றஉறுதுணையாக இருப்பது இறைவார்த்தையும், நற்கருணை பிரசன்னவுமே. இறைவார்த்தையில் நம் இதயம் உள்ளொளி பெறுகிறது. நற்கருணை ஆன்ம உணவாகி ஆண்டவரின் உடன் இருப்பையும் அருள்கிறது. இவை இரண்டும் நமது வாழ்வை ஆற்றல்படுத்தவும், சமூக உறவை மேம்படுத்தி இயேசுவின் இலட்சியக் கனவாகிய மாற்று சமூகத்திற்கு அடித்தளமாக வாழவும் நமக்கு வழிகாட்டுகிறது. எனவே இறையாட்சி சமூகத்தை உருவாக்க நம்முடைய குடும்பங்களையும், வாழ்வையும் புதுதாக்கிக் கொள்வோம். குடும்பங்களில் நிலவும் மகிழ்சியே திருஅவையின் மகிழ்ச்சி. குடும்பங்கள் வீழ்ச்சி அடைந்தால் திருஅவையும் வீழ்ச்சியை சந்திக்கும். எனவே குடும்பங்களை மையமாகக் கொண்ட ஆன்மீக ஆற்றல்படுத்துதல் ஒரு அவசர தேவையாக உணரப்படுகிறது. இதற்காக மறைமாவட்ட அருங்கொடை இயக்கம் சில முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றன.

**மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா:**

ஆண்டுதோறும் காத்திருப்பு காலத்தின் இறுதி நாட்களில் நற்செய்தி பெருவிழா நடத்துவது வழக்கம். கடந்த இரண்டு ஆண்டுகளாக இணைந்து வர முடியாத சூழலில் இப்பெருவிழா ஊடகங்கள் வாயிலாக நடத்தப்பட்டது. இந்த ஆண்டு ஜூன் மாதம் 2,3,4 தேதிகளில் இப்பெருவிழா குழித்துறைமார் எப்ரேம் வளாகத்திலுள்ள தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெறவிருக்கிறது. இந்நற்செய்தி பகிர்தல் ஒவ்வொரு நாளும்

மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9.00 மணிக்கு நிறைவுபெறும். இந்நற்செய்தி பெருவிழா, 5-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நாம் கொண்டாட இருக்கும் பெந்தகோஸ்து பெருவிழாவிற்கும், அன்று மாலை 4.00 மணிக்கு காற்றாடி மலையில் வைத்து நடைபெறும் புனித தேவசகாயத்திற்கு கிடைத்த பெருமையை நினைத்து செலுத்தப்படும் நன்றி திருப்பலிக்கும் ஆயத்தமாக அமையும். இந்நிகழ்வுகளில் அனைவரும் ஆர்வத்தோடு கலந்துகொள்ள அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.

## ஆன்மீக ஆற்றல்படுத்துதல்:

இந்நற்செய்தி பெருவிழாவின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் அருளில் தொடர்ந்து வாழ தொடர்பயணம் அவசியம். ஒவ்வொரு மாதத்திலும் முதல் சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் ஜெபமாலை, திருப்பலி, நற்செய்தி பகிர்வு, நற்கருணை ஆசீர் போன்றவை நடைபெறும். மறைவட்ட நற்கருணை சிற்றாலயங்களில் ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக்கிழமை இரக்கத்தின் ஜெபமாலை, ஜெபமாலை, மாதாவின் மத்தியஸ்த ஜெபம், நற்கருணை ஆசீர் போன்றவை உள்ளடக்கிய சிறப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்படும். திருத்தலங்களில் வழக்கமாக நடைபெற்று வரும் பக்தி முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும்.

## பெருவிளை புனித தேவசகாயம் திருத்தலம்:

இந்திய திருஅவையும், தமிழக திருஅவையும் குறிப்பாக குமரி திருஅவையும் பெருமையுடன் ஒளிரும் நாட்கள் இது. குடும்பங்களில் ஆன்மீகம் தளர்ச்சி கண்டிருக்கும் இக்காலகட்டத்தில் புனித தேவசகாயத்தின் நம்பிக்கை வாழ்வு நம் குடும்பங்களுக்கு புத்துயிர் ஊட்டுவதாக அமையும். இன்று புனிதராக உயர்த்தப்பட்ட புனித தேவசகாயம் ஏழு மாதக்காலம் பாடுகள் ஏற்று புனிதபடுத்திய இடமே பெருவிளை. பட்ட வேப்பமரம் துளிர்விட்டதும், திருக்குடும்ப தரிசனம் பெற்றதும், குழந்தை செல்வம் பெற்றுக் கொடுத்ததும் இத்திருத்தலத்தின் முகவரியாக அமைந்திருக்கிறது. இத்திருத்தலம்



இனி நமக்கு நிரந்தரமான ஒரு சந்திப்பு மையம். எல்லா வெள்ளிகிழமைகளிலும் காலை 10.00 மணிக்கு திருப்பலி, புனித தேவசகாயத்தின் பரிந்துரை வேண்டி மத்தியஸ்த ஜெபம் (நவநாள்) போன்றவை நடைபெறும். நமது மறைமாவட்டத்தின் பெருமைக்குரிய இடமாக இத்திருத்தலம் இருக்கிறது. நாகர்கோவிலுக்கு சென்று வருபவர்கள் இத்திருதலத்தை சந்தித்து வருவது நம் விசுவாச வாழ்விற்கு ஆற்றல் கொடுப்பதாக அமையும்.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளெல்லாம் நமது மறைமாவட்டத்தின் அருங்கொடை இயக்கமும் அருட்தந்தையர்களும் இணைந்து ஒழுங்குபடுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அருங்கொடை இயக்கத்தின் இணைந்த முயற்சிகளுக்காக ஆர்வமுள்ளவர்களின் முகவரி மற்றும் அலைப்பேசி எண் ஆகியவை இயக்கத்தின் இயக்குநர் அருட்தந்தை சிபி அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். 100 குடும்பங்களுக்கு கீழ் உள்ள பங்கிலிருந்து 1 நபரும் அதற்கு மேலுள்ள பங்கிலிருந்து 2 நபருக்கு குறையாமலும் அனுப்பி வைக்கும்படி பங்குதந்தையர்களை கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஒரு ஆன்மீக ஆற்றல்ப்படுத்துதல் நம்முடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும், இணைந்த பொறுப்புள்ள செயல்பாட்டின் தளமாகிய பங்குகளிலும் உதயமாக்க முயற்சிப்போம். நம் மறைமாவட்ட பாதுகாவலரான தூய பவுலின் பணியும் வாழ்வும், புனித குழந்தை தெரசாவின் தூய வாழ்வும் நமது நற்செய்தி அறிவித்தல் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கட்டும். இவர்கள் பரிந்துரைகள் நமக்கு துணையாகட்டும். இறையாசீர் உங்களோடு தங்குவதாக.

***இவண்,***



**† மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர்

# குருமடச் செய்திகள்

நமது மறைமாவட்டத்திலுள்ள 9 மற்றும் அதற்கு மேல் படிக்கின்ற மாணவர்களுக்கு ஏப்ரல் 2-ம் தேதி அன்று இறையழைத்தல் முகாம் குழித்துறை மேய்ப்புபணி மையத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 90-க்கு அதிகமான மாணவர்கள் உற்சாகத்துடன் பங்கெடுத்து மகிழ்ந்தனர். மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் மாணவர்களுக்கு குருத்துவாழ்வை குறித்து வகுப்பு நடத்தினார். அருட்தந்தை ஜாண்ஷிபு அவர்கள் தன்னுடைய குருத்துவ அழைப்பின் அனுபவங்களை மாணவர்களிடம் பகிர்ந்தார். புது குருவாக அருட்பொழிவு செய்யப்பட்ட அருள்தந்தை விபின்ஸ் அவர்கள் தன்னுடைய குருத்துவ அழைப்பு குறித்து பகிர்ந்துக் கொண்டார்.

இந்த முகாமை அருட்சகோதரர்கள் ஒருங்கிணைத்து குருத்துவ வாழ்வின் மேன்மையைக்குறித்த அனுபவங்களை பகிர்ந்தும், ஆடல், பாடல் மற்றும் நாடகங்கள் வழியாகவும் எடுத்துரைத்தனர்.







# நற்செய்தி சங்கமம்

இந்த மாதம் நற்செய்தி சங்க வகுப்பு ஆனது 14 ம் தியதி தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இதில் அனைத்து நற்செய்தி சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். அருட்தந்தை ரதீஷ் ரிச்சார்ட் அவர்களால் வகுப்பு நடத்தப்பட்டது.

# மறைபரப்பு பணித்தள செய்திகள்

## புலம்பெயர்ந்தோர் பணிக்குழு

பணி நிமித்தமாக, கல்வி நிமித்தமாக மற்றும் வேறு காரணங்களால் வெளியூரில், வெளி மாவட்டத்தில், வெளி மாநிலங்களில் இருக்கும் நம் மறைமாவட்டத்திற்குப்பட்ட இறைமக்களை இணைக்கும் பணிக்குழுவின் இரண்டாவது google meet சென்ற 16-05-2022 திங்கள்கிழமை அன்று மாலை 8.30 முதல் இரவு 9.30 வரை நடைப்பெற்றது. இது நமது தமிழ் மண்ணின் முதல் புனிதர் தேவசகாயம் அவர் புனிதராக உயர்த்தப்பட்டதன் கொண்டாட்டமாகவும் இருந்தது. இதில் ஜெபமாலை ஜெபித்து, விவிலியம் வாசித்து ஆயர் அவர்கள் உரோமை நகரிலிருந்து ஆசி வழங்கினார்கள் பல நாடுகளிலிருந்து பலர் கலந்து கொண்டனர். நமது மறைமாவட்டத்தில் வெளி ஊர்களில் இருக்கும் அனைவரது அலைபேசி எண்களும் பெற்றுக்கொண்டு பொதுநிலையினரிடமிருந்தே ஒருங்கிணைப்பாளர் தேர்ந்தெடுத்து ஒருங்கிணைத்து நிகழ்வுகள் நடத்துவது இன்னும் சிறப்பாக இருக்கும் என்று பேசப்பட்டது. அடுத்த google meet ஜூன் மாதம் 11-ம்தேதி நடைபெறும் என்றும் whatsapp group-ல் link அனுப்பி கொடுக்கப்படும் என்றும் கலந்துரையாடப்பட்டது.

# புனித தேவசகாயம்
# புனிதர் பட்ட அறிவிப்பு விழா

















# பெருவிளை திருத்தலம்

15-05-2022 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருளார் தேவசகாயத்தை புனிதராக அறிவித்தார். அன்றைய தினம் பெருவிளை திருத்தலத்தில் மறைவட்ட முதன்மைகுரு. பேரருட்தந்தை மரிய ஜாண் அவர்கள் தலைமையில் மறைவட்டகுருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து நவநாள் ஜெபமும் நடத்தினார்கள்.





# மேரி மக்கள் துறவற சபை

சூசையப்பர் மாகணத்தின் அருட்சகோதரிகளுக்கான ஆண்டு தியானம் 08-05-2022 முதல் 13-05-2022 அன்று வரை நடைபெற்றது. 85 அருட்சகோதரிகள் கலந்து கொண்டார்கள். இத்தியானத்தை அருட்தந்தை ஜிசன் பால் அவர்கள் வழிநடத்தினார்.

## SISTERS OF CHARITY OF ST. JEANNE ANTIDE THOURET

மறைமாவட்ட புதுகுருக்கள் 04-05-2022 அன்று பாலவிளையில் அமர்ந்திருக்கும் முதியோர் இல்லத்தை சந்தித்து திருப்பலி நிறைவேற்றினார்கள். புதுக்குருக்களின் வருகை அருட்சகோதரிகளுக்கும், முதியோர்களுக்கும் மகிழ்ச்சியை அளித்தது.





# பெதனி கல்வி கூடங்கள்

**பெதனி கல்வியல் கல்லூரி**

- Poster Making competition மற்றும் Inter Collegeate Gathering of Women என்ற நிகழ்ச்சி 23-04-2022 அன்று அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் வைத்து நடைப்பெற்றது. பெதனி கல்லூரி மாணவிகள் கலந்துக் கொண்டு பரிசுப்பெற்றனர்.
- 02-05-2022 அன்று Annual day Celebration மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**பெதனி நவஜீவன் CBSE மேல்நிலைப்பள்ளி**

- மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி 20-03-2022 அன்று நடைப்பெற்றது. பெதனி பள்ளி மாணவர்கள் கலந்துக்கொண்டு பரிசுப் பெற்றனர்.
- இந்துஸ்தான் சாரணர் மற்றும் சாரணியர் பயிற்சி முகாம் 24-03-2022 முதல் 26-03-2022 வரை நடைப்பெற்றது.
- பெதனி CBSE பள்ளிகூடத்தின் புதிய கட்டிடத்திறப்பு விழா 02-05-2022 அன்று பேரருட்தந்தை மத்தாய் கடவில் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.





## LITTLE FLOWER MATRICULATION SCHOOL
## PUSHPAGIRI

**HOLY MASS**



2021-2022-ம் கல்வி ஆண்டில் அரசு பொதுத்தேர்வு எழுதுகின்ற X, XI, XII மாணவர்களுக்கான வேண்டுதல் திருப்பலி 02-05-2022 அன்று கொல்லங்கோடு மறைவட்ட முதன்மைகுரு அருட்தந்தை ராபின்சன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

## மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

**கல்லூரியின் 15–வது ஆண்டுவிழா – 2022**

கல்லூரியின் 15-வது கல்லூரி ஆண்டு விழாவானது 6/05/2022 அன்று மாலை நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரி நிறுவனர் முன்னாள் மேதகு ஆயர் யூகானோன் மார் கிறிஸோஸ்டம் அவர்கள் தலைமையுரை யாற்றினார். முனைவர் மீனாக்ஷி சுந்தரராஜன் (நாஞ்சில் கத்தோலிக்க கல்லூரி முதல்வர்)அவர்கள் சிறப்புரையாற்றினார். கோல்லங்கோடு நகராட்சி தலைவர் திருமதி. ராணி ஸ்டீபன் அவர்களும் பெற்றோர் ஆசிரியர்கழக தலைவர் திருமதி. ராணி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில் சிறப்பு விருதுகளும், பாராட்டு விருதுகளும் வழங்கப்பட்டது. இறுதியில் ஆசிரியப் பயிற்சி மாணவர்களுக்கான பலவிதமான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. கலை நிகழ்ச்சியானது இரவு 11.30 மணியளவில் முடிவடைந்தது.

# MCA
## Diocese of Marthandam

**MCA கூடுகை**

மார்த்தாண்டம் மறை மாவட்ட MCA கூட்டமானது 15.5.2022 அன்று குழித்துறையில் வைத்து MCA தலைவர் திரு. ஜாண் எட்வர்ட் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. MCA மத்திய குழுவின் சார்பாக மே மாதம் 24, 25, 26 ஆகிய தேதிகளில் நடைபெறும் 'Light 2022' என்ற Integrated 'Talent Development Programme' -ல் அனைத்து MCA மேலாண்மை குழு உறுப்பினர்களும் ஒத்துழைக்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஜூன் மாதம் 9-ம் தேதி வேளாங்கண்ணிக்கு திருப்பயணம் செல்லவும் 10-ம் தேதி ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் வேளாங்கண்ணியில் வைத்து நடைபெறும் திருப்பலியில் அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. மார்த்தாண்டம் மறை மாவட்ட மாணவர்களுக்கு 'Light 2022' Programe ஜூன் மாதம் 11 -ம் தேதி நடத்த தீர்மானிக்கப்பட்டது.

**திருமண ஆயத்தப்பயிற்சி**

**ஜூன்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 17, 18 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

**1. வணிகவியல் துறை ஆராய்ச்சி மையம்**

வணிகவியல் துறையின் ஆராய்ச்சிமையமானது 16.05.2022 அன்று மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம் திருநெல்வேலி ஆராய்ச்சி மைய இயக்குநர் முனைவர் அண்ணாதுரை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**2. நுண்ணுயிரியல் துறை**




16.05.2022 அன்று நுண்ணுயிரியல் துறை சார்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. கருத்தரங்கின் சிறப்பு விருந்தினராக துறையின் முன்னாள் மாணவன் திரு.சந்தோஷ் குமார் வருகை புரிந்து உணவுபொருள்களின் தரம் கண்டறிதல் மற்றும் சான்றிதழ் பெறும் முறை பற்றி விளக்கமளித்தார்.

**3. போட்டிகள்**

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் வைத்து நடைபெற்ற போட்டிகளிலும் மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற போட்டியிலும்



வெற்றி பெற்று முதலிடத்தை பிடித்தனர். சுங்கான்கடை ஐயப்பா கல்லூரியில் வைத்து நடைபெற்ற வினாடி வினாபோட்டியில் ஆங்கிலதுறையை சார்ந்த செல்சியா மற்றும் அபிஷா ராஜ் ஆகியோர் பங்குபெற்று முதலிடத்தைபெற்றனர்.

நூறுல் இஸ்லாம் உயர்கல்வி மையம் குமாரகோவிலில் வைத்து நடைபெற்றபோட்டியில் வணிகவியல் துறையைசார்ந்த மாணவர்கள் முதலிடம் பெற்றனர்.

### 4. ஆரோக்கிய மையம்

கல்லூரியில் செயல்படும் ஆரோக்கியமையம் மற்றும் களியக்காவிளை ஜேசிண்லி ஜண்ட் இணைந்து நடத்திய சமுக ஆரோக்கிய விழிப்புணர்வு கருத்தரங்கமானது 13.05.2022 அன்று நடத்தப்பட்டது.

### 5. கணிணி அறிவியல் துறை

10.05.2022 அன்று கணிணி அறிவியல் துறைசார்பில் ஒருநாள் கருத்தரங்கானது இணைய பாதுகாப்பு எனும் மையக்கருத்தை அடிப்படையாக கொண்டு நடத்தப்பட்டது. சென்னை இணைய பாதுகாப்பு தொழில் நுட்பவல்லுநர் திரு ஸ்டாலின் பென்னி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டுசிறப்புரையாற்றினார்கள்.





# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

### Annual Day Celebration

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் ஆண்டுவிழா 02-05-2022 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. சிறப்பு விருந்தினாராக C. ஜெபசிகா மணி (Deputy Director, ISRO, Govt of iIndia) மற்றும் N. பிரதிப் (CEO Mature Chandru) கலந்துக்கொண்டார்கள்.

### கலை நிகழ்ச்சிகள்

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் 02-05-2022 மதியம் முதல் 04-05-2022 மாலை 5.30 மணி வரை lestine Beats கலைநிகழ்ச்சி நடைப்பெற்றது. இக்கலை நிகழ்ச்சிகளில் பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. 04-05-2022 அன்று மாலை 4.00 மணியளவில் Mrs. Jenisha Sharon Jha (Ms. India) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.



# MCYM
## Youth Apostolate

### பொறுப்பாளர்கள் பதவியேற்பு

மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கம் மார்த்தண்டம் மறைமாவட்டத்தின் செயற்குழு உறுப்பினர்களில் பதவியேற்காத உறுப்பினர்களுக்கு 08-05-2022 அன்று சுமார் 3.00 மணியளவில் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் வைத்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் முன்னிலையில் உறுதிமொழி எடுத்து அதிகார பூர்வமாக பதவியேற்றுக் கொண்டனர். Syndicate உறுப்பினராக செல்வன் பிரிஜின் அவர்களும், Senat உறுப்பினராக செல்வி. Josephine Ancy அவர்களும் lay animators ஆக திருமதி.. Jasmin Aloysious அவர்களும், திரு. Rastin அவர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.



பதவியேற்றுக் கொண்ட பொறுப்பாளர்களுக்கு ஆயர் அவர்கள் ஜெபங்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

### செயற்குழு கூட்டம்

மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் செயற்குழு கூட்டமானது 14-05-2022 அன்று சுமார் 10.00 மணி அளவில் MCYM-ம் அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை Johny Alfred



அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. பொறுப்பேற்ற உறுப்பினர்களுக்கு இயக்குர் தந்தை அவர்கள் வாழ்த்துகளை தெரிவித்தார். உலக சுற்றுச்சூழல் தினத்தை (June5) முன்னிட்டு இயற்கையே பாதுகாக்கும் நோக்கத்துடன் காய்கறி தோட்டம் அமைக்கும் போட்டியானது நடத்த வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டது. மத்திய செயலகத்தில் இருந்து உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு Paper presentation போட்டியானது ஆங்கிலம் மற்றும் மலையாள மொழிகளில் நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. போட்டிகள் நடத்துவதற்கான ஒழுங்கமைப்புகள் குறித்தும் அலோசிக்கப்பட்டது. இறுதியாக இயக்குநர் அருட்தந்தை அவர்களின் ஆசீர்வாதத்துடன் கூட்டம் நிறைவடைந்தது.

# புனித வின்சென்ட் தே பவுல் சபை
## மார்த்தாண்டம் மத்திய சபை

புனித வின்சென்ட - தே-பவுல் பாலவிளை வட்டார சபையின் ஆண்டுவிழா 08-05-2022 அன்று பிற்பகல் 2.00 மணி அளவில் வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை அலெக்ஸ் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மருத்துவ உதவி ரூ.3000/- வீதம் 10 நபருக்கும், தொழிற்கடனாக ரூ.10000/- வீதம் 7 நபருக்கும், வழங்கப்பட்டது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## தன்னார்வலர் சிறப்பு பயிற்சி

எழுவோம் இயக்கத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வலர்களுக்கு 26.04.2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். Dr. செந்தில் குமார் அவர்கள் பயிற்சி வழங்கினார்கள். பயிற்சியில் தன்னார்வலர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும், மக்களுக்கு புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆரம்ப கால வழிகாட்டுதல்களை எவ்வாறு அளிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. இந்த பயிற்சியில் மொத்தம் 78 தன்னார்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.




## ஆடு வழங்குதல்

மிட்ஸ் வெள்ளி விழா சிறப்பு திட்டங்களில் ஒன்றான சமூகத்தில் நலிவடைந்த மக்களுக்கு ஆடு வழங்கும் திட்டத்தின் வழியாக 25 பயனாளிகளுக்கு 28.04.2022 அன்று நடைக்காவு பங்கில் வைத்து ஆடுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், நடைக்காவு பங்குதந்தை அருட்தந்தை அருள்தாஸ் மற்றும் மிட்ஸ் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கினார்கள்.





## மகளிருக்கான எலக்ட்ரிக்கல் மற்றும் பிளம்பிங் பயிற்சி

மிட்ஸ் வெள்ளி விழா சிறப்பு திட்டங்களில் மகளிருக்கான எலட்ரிக்கல் மற்றும் பிளம்பிங் பணிகளுக்கான பயிற்சியானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து 09.05.2022 முதல் 13.05.2022 வரை நடத்தப்பட்டது. இப்பயிற்சியினை திரு.பெலிக்ஸ் சேவியர் அவர்கள் நடத்தினார்கள். இப்பயிற்சியில் மொத்தம் 17 பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## தொழில் முனைவோர் பயிற்சி



மானோஸ் யூனிதாஸ் என்ற திட்டத்தின் வழியாக குழுவாக தொழில் துவங்கும் பயனாளிகளுக்கு தொழில் முனைவோர் பயிற்சியானது 17.05.2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்நிகழ்வினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். பயிற்சியினை திரு.ஜூலியஸ் பாண்டியன் அவர்கள் நடத்தினார்கள். இப்பயிற்சியில் மொத்தம் 40 பயனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## உதவிதிட்டங்கள்

19.05.2022 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக 16 சுய உதவி குழுக்களில் உள்ள 64 உறுப்பினர்களுக்கு குழுவிற்கு ரூபாய் 2,00,000/- வீதம் மொத்தம் 32,00,000/- ரூபாய் கடனாக வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

05.05.2022 மற்றும் 06.05.2022 ஆகிய தினங்களில் கன்னியாகுமரி சமூகப்பணி மையத்தில் வைத்து நடைபெற்ற Monitoring Evaluation Accountability Learning Workshop நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் திருமதி.வினிதா ராணி மற்றும் அமைப்பாளர்கள் திருமதி.சஜிதா, திருமதி.பேபி சரோஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

10.05.2022 முதல் 13.05.2022 வரை குடும்ப வளர்ச்சி திட்ட தேசிய அலுவலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் திருமதி.வினிதா மற்றும் திருமதி.ஜெசீந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

### குருக்கள் கூடுகை



மறைவட்ட குருக்களின் தியானமும், கூடுகையும் 10-05-2022 அன்று தேமானூர் பங்கில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில் மறைவட்ட வளர்ச்சிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

### MCYM

மறைவட்ட MCYM board meeting ஆனது 15-05-2022 அன்று தேமானூர் பங்கில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை. சஜின் தலைமையில் நடைபெற்ற இக்கூடுகையில் மறைவட்ட பொறுப்பாளர்கள் கலந்துக்கொண்டு ஆலோசனை வழங்கினர்.

## நாகர்கோவில் மறைவட்டம்

நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் கூடுகையானது 11-5-2022 கிறிஸ்து விளாகம் பங்கில் வைத்து நடைபெற்றது. இதில் நாகர்கோவில் மறைவட்ட குருக்கள் கலந்துகொண்டனர். மறைவட்டத்தின் வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்பட்டது.



## பனச்சமூடு மறைவட்டம்




பனச்சமூடு மறைவட்டதில் மே மாதம் 8 ஆம் தியதி மதியம் 2 மணி முதல் 4:30 மணி வரை ஆயர் மாமன்றம் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. இதனை அருள் தந்தை. அஜீஷ் ஜோகன் அவர்கள்



வழிநடத்தினார். பனச்சமூடு மறைவட்டதில் உள்ள அனைத்து பங்குகளிலும் உள்ள பங்கு பேரவை உறுப்பினர்கள், பக்த இயக்கங்களில் பொறுப்பாளர்கள், அருள் தந்தையர்கள், அருள் கன்னியர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## அழகியமண்டபம் மறைவட்டம்

### மறைக்கல்வி தலைமையாசிரியர் கூடுகை

அழகிய மண்டப மறைவட்ட மறைக்கல்வி பணிக்குழுவின் சார்பாக அனைத்து மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் ஆலோசனை கூடுகை நடைப்பெற்றது. இக்கூடுகையில் மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை ரெதிஸ் அவர்களின் துணையோடு நடைப்பெற்றது. இக்கூடுகையில் மறைக்கல்வி தேர்வுகள், MBOC மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்கள் பயிற்சியை குறித்து ஆலோசிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை ரெஜின் ரெதீஷ்
ஜூன் 09



அருட்தந்தை. ஆன்றணி
ஜூன் 13



அருட்தந்தை
பெனடிக்ட் ஆன்றோ
ஜூன் 13



அருட்தந்தை
சுரேஷ் ஆன்றனி
ஜூன் 13



அருட்தந்தை
ஆன்றோ ஜெபின்
ஜூன் 13



அருட்தந்தை
ஜோணி ஆல்பிரட்
ஜூன் 24



அருட்தந்தை.
ஜோசப் பத்றோஸ்
ஜூன் 29



அருட்தந்தை
பிபின்
ஜூன் 29



# ஆயரின் மே மாத நிகழ்வுகள்



1 ➢ செல்லங்கோணம் புனித ஜார்ஜியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை பிள்ளைகளுக்கு புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

1 ➢ கிராத்தூர் புனித ஜார்ஜியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை பிள்ளைகளுக்கு புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

1 ➢ அடைக்காகுழி புனித சூசையப்பர் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் ஜூபிலி தொடக்க நிகழ்வில் தலைமை தாங்கி ஜூபிலியை துவங்கி வைத்தார்.

2 ➢ பேராலயத்தின் மேற்கூரை மற்றும் கோபுர வேலைகளை ஜெபித்து துவங்கி வைத்தார்.

2 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் ஆண்டு விழாவிற்கு தலைமை தாங்கினார்.

2 ➢ பெதனி CBSE பள்ளிக்கூடத்தின் ஆண்டுவிழாவிற்கு தலைமைதாங்கி சிறப்புரையாற்றினார்.

3 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து களப்பணி நிறைவுசெய்த அருட்சகோதரருக்கு குருத்துவ அங்கி வழங்கினார்.

3 ➢ தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்ற இறையழைத்தல் முகாமில் கலந்துக்கொண்டு சிறப்பு வழிகாட்டுதல் வழங்கினார்.

5 ➢ மரியாகிரி மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட கல்லூரியின் முகவாரத்தை அர்ச்சித்து இறையாசி பொழிந்தார்.

14 ➢ வத்திக்கானில் நடைபெற்ற கலைஇரவில் தமிழக ஆயர்கள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் திருப்பயணிகளோடு இணைந்து கலந்துக் கொண்டார்.

15 ➢ அருளாளர் தேவசாகயத்தின் புனிதர் பட்ட அறிவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டார்.

26 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து MCA சார்பாக ஒழுங்குப்படுத்தப்பட்ட Light என்ற நிகழ்வில் தலைமை தாங்கி வகுப்பு எடுத்தார்.

26 ➢ சிதறால் புனித மரியன்னை மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை பிள்ளைகளுக்கு புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

27 ➢ இலவுவிளை தூய எப்ரேம் இளங்குருமடத்தில் வைத்து அருட்சகோதரர்களுக்கு இளநிலை பட்டங்கள் வழங்கி ஆசீர்வதித்தார்.

27 ➢ மார்த்தாண்டம் புனித சூசையப்பர் மாகாணத்தில் வைத்து முதல்வார்த்தைப்பாடு அருள்சகோதரிகளின் துறவற வரவேற்பு திருச்சடங்கை தலைமையேற்று நடத்தினார்.

28 ➢ மார்த்தாண்டம் புனித சூசையப்பர் மாகாணத்தில் வைத்து முதல் வார்த்தைப்பாடு மற்றும் நித்தியவார்த்தைப்பாடு திருச்சடங்கை தலைமையேற்று நடத்தி ஆசீர்வதித்தார்.

29 ➢ நடைக்காவு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

29 ➢ பின்குளம் ஆலயத்தில் ஜூபிலி திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

30 ➢ தூய எப்ரேம் இளங்குருமடத்தில் வைத்து 5 அருட் சகோதரர்களுக்கு திருத்தொண்டர் பட்டம் வழங்கி ஆசீர்வதித்தார்.



## இம்மாதம் நினைவு கூர

ஜூன் 2022

05


13


19


21


24


30


1 – புனித ஜெஸ்டின்
5 – பெந்தக்கோஸ்துத் திருநாள்
புனித போனிபஸ்
8 – திருத்தூதரான மார் யாக்கோபு முதல் திருப்பலி
ஒப்புக் கொடுத்ததன் நினைவு, புனித மரிய தெரசாள்
11 – மார் பர்த்தலமேயு மற்றும் மார் பர்ணபாஸ்
மலங்கரை கத்தோலிக்க திரு ஆட்சி பீடம் நிறுவப்பட்ட நாள்
12 – பெந்தக்கோஸ்துக்குப்பின் முதல் ஞாயிறு
13 – பதுவை நகரின் புனித அந்தோணியார்
14 – இறைவாக்கினர் எலிசா
15 – தூய இறையன்னையின் பெயரில் முதல் தேவாலயம்
நிறுவியதன் நினைவு
16 – திருத்தூதர் நோன்பு (பதிமூன்று நோன்பு தொடக்கம்)
18 – மார் எஃப்ரேம் மல்பான்
19 – பெந்தக்கோஸ்துக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
திருத்தூதர் புனித யூதா ததேயு
21 – புனித அலோஷியஸ் கொன்சாகோ
24 – ஸ்நாபக யோவானின் பிறப்பு
சேப்பாட்டு பிலிப்போஸ் ரம்பானின் நினைவு
திரு இருதய திருநாள் (இலத்தீன் முறை)
26 – பெந்தக்கோஸ்துக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
27 – யாக்கோபு மார் தியோஃபிலோஸ் ஆண்டகையின் நினைவு
28 – புனித ஐரேனியூஸ், சாமுவேல் மார் ஐரேனியூஸ்
ஆண்டகையின் பெயர்விழா
29 – திருத்தூதர்களான புனித பேதுரு, புனித பவுல்
திருத்தூதர் நோன்பு நிறைவு
தூய மரியன்னை மலங்கரை குருத்துவக் பயிற்சியகம் நிறுவப்பட்ட நாள்
யுஹானோன் மார் கிறிஸோஸ்டோம் மற்றும் யோசுவா மார்
இக்னாத்தியோஸ் ஆண்டகையரின் ஆயர் திருநிலைப்பாடு
வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பெயர்விழா
30 – பன்னிரு திருத்தூதர்கள்


திருத்தூதர்களான
புனித பேதுரு,
புனித பவுல்
திருநாள் வாழ்த்துக்கள்
ஜூன்
29


நாமவிழா நல்வாழ்த்துக்கள்
ஜூன்
28
சாமுவேல் மார் ஐரேனியூஸ்
பத்தனம்திட்டை மறைமாவட்ட ஆயர்


ஜூன் 05
பெந்தக்கோஸ்துத்
திருநாள்